






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி


மலர் 2 இதழ் 28 23.07.2026



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# முத்துக்கள்

## வேதம் தோன்றிய வரலாறு

*வேதம் என்றால் என்ன?*

*வடமொழியில் 'வேத' என்ற வினைச் சொல்லிற்கு அறிதல் என்று பொருள். 'வேதம்' என்றால் Supreme Knowledge என்று ஒரு சிலரும், மற்றும் சிலர் 'வேதம்' என்ற சொல்லிற்கே விஞ் ஞானம் என்றுதான் பொருள் என அறுதி யிட்டுக் கூறுகிறார்கள்.*

*வேதம் ஒரு ஒளிவிளக்கு. அதன் ஒளியில் அறியாமை என்ற இருள் அகற்றப்படுகிறது.*

*வேதம் ஒருவனை நல்ல பாதையில் மட்டுமே, நேர் பாதையில் மட்டுமே அழைத்துச் செல்லும். வேதம் படித்த தால் கெட்டவன் யாருமில்லை. வேதம், எப்பொழுது, யாரால் எழுதப்பட்டது?*

*போகிற போக்கில் இக்கேள்வியை யார் வேண்டுமானலும், எப்படி வேண்டுமானலும் கேட்கலாம். ஆனால் பதில் எல்லாவற்றிற்கும் ஒன்றுதான்.*

*வேதம் மனிதர்களால் உருவாக்கப் படவில்லை என்பது சத்தியம். ஆகவே அதற்கு 'அபௌருஷேயம்' என்றும், பிரம்மத்தால் ஒவ்வொரு யுகத்தின் முடி விற்குப்பிறகும் அடுத்த யுகம் துவங்கும் பொழுது ஏற்கனவே படைக்கப்பட்ட வேதங்கள் காற்றுவெளியில் இருப் பவை ரேடியோவின் ஒலி வாங்கிக் கருவியைப் போல, மஹரிஷிகளும், மாமுனிவர்களும் கிரஹித்துச் சுவடிகளில் பதிவு செய்ததை நான்காகப் பிரித்துத் தந்தார் என்பது வேதவியாசர் அழியாத, அமரத்வம் வாய்ந்த ஒரு வரலாறு.*

*வேதம் கடவுளால் படைப்பின் துவக்கக் காலத்தில் உருவானது என்றால், படைப்பின் துவக்க காலம் எது?*

*இதுவும் ஒரு கடினமான கேள்வியே! மூன்று யுகங்களுக்கு முன்னர், தற்போது நடந்து கொண்டிருக்கும் கலியுகத்தையும் சேர்த்து மொத்தம் நான்கு யுகங்களாக வேதம் இருந்து வருகிறது. இனி கலி முடியும்வரை இருக்கவும் போகிறது.*

*அதனைப்பற்றிய கணக்கு இதோ கீழே தரப்படுகிறது. 'மாக்ஸ் முல்லர்' என்கிற ஜெர்மானியர், வேத காலம் என்பது, இயேசு பிறப்பதற்கு 1200 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகச் சொல்கிறார்.*

*ஆனால், 'பாலகங்காதர திலகர்' இதனை மறுக்கிறார். தன்னுடைய வேத காலக் கணக்கை நிரூபித்தும் காட்டு கிறார். அவர் சொல்வது - வேதகாலம் என்பது 8000 ஆண்டுகளுக்கு முறப்பட்டது என்பதாகும்.*

*வேறு, ஒரு விஞ்ஞானி வேதம் - தோன்றிக் குறைந்தது 25000 ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்கிறார்.*

*'சிலேகல்' என்ற ஜெர்மானியர் ஒரு - பெரிய சித்தாந்தி. அவர் வேதங்கள் - உலகின் மிகமிகப் பழமையான நூல்கள் என்கிறார்.*

*ஆனால், வாழும் முனி ஸ்வாமி 'தயானந்த ஸரஸ்வதி' இப்பொழுது உள்ள படைப்பு நாம் தினந்தோறும் - செய்து வரும் சங்கல்பக் கணக்குபடி, ஆறு மன்வந்திரம்,*

*28 சதுர்யுகம் எனச் சொல்லி அதனைக் கணக்கிட்டுச் சுமார் 1960853036 மனித ஆண்டுகள் ஆகியிருக்கலாம் எனக் கூறியிருக்கிறார்.*

சதுர்யுகம் என்பது நான்கு யுகங்கள்.

1. க்ருதயுகம் அல்லது சத்யயுகம்

2. த்ரேதாயுகம்

3. த்வாபர யுகம்.

4. கலியுகம்.

கணக்குகளின்படி இவைகளின் ஆண்டுகள் இப்படி:-

1. க்ருதயுகம் : 17,28,000 மனித ஆண்டுகள்.

2. த்ரேதாயுகம் : 12,96,000 மனிதஆண்டுகள்.

3. த்வாபரயுகம் : 8,64,000 மனித ஆண்டுகள்.

4. கலியுகம்: : 4,32,000 மனித ஆண்டுகள்.

இப்பொழுது செய்யப்படும் சங்கல்பங்களில், "கலியுகே, பிரதமே பாதே" என்கிறார்கள். அதாவது கலியுகம் பிறந்து 18,000 ஆண்டுகள் ஆகின்றன என்பது புலனாகிறது.

*****************************************************************************
*****************************************************************************

பரத்வாஜர் என்ற ஒரு முனிவர், தன்னுடைய மூன்று புருஷ ஆயுட்காலம் முழுவதும் பிரம்மசாரியாகவே இருந்து வேதம் பயின்று வந்தார். (ஒரு புருஷ ஆயுள் என்பது 400 ஆண்டுகள் ஆகும்)

மானிட ஜன்மமான அவர், முதுமை யடைந்து, தளர்ந்து, படுத்தபடியே இருக்கிறார். இந்திரன் அவரைப் பார்க்க வருகிறான் (அதெல்லாம் அந்த யுகத்தில் சகஜம்)

இந்திரன் அவரிடம், "பரத்வாஜரே! உமக்கு நான் நான்காவது புருஷ ஆயுளைத் தருகிறேன். அதை எப்படிச் செலவழிப்பீர்கள் என்று' வினவ, அதிலும் பிரம்மசாரியாகவே இருந்து வேதங்களை மென்மேலும் கற்பேன்' என்கிறார்.

உடனே இந்திரன், அவருக்கு எதிரிலேயே மூன்று மலைகளைப் படைத்து, ஒவ்வொரு மலையிலிருந்தும் ஒவ்வொரு பிடி மண்ணை எடுத்துக் கொண்டு பரத்வாஜரிடம் காண்பித்து, 'நீங்கள் இந்த 1200 ஆண்டுகளாகக் கற்றவைகள் இவைகள்தான். எதிரில் தெரியும் மலைகள் வேத மலைகள். நான் எடுத்துக் காண்பித்த மூன்றுபிடி மண் போக, எஞ்சியவை நீர் கற்க வேண்டி யவைகள்" என்றான்.

வேதங்கள் முடிவு இல்லாதது, அளவு இல்லாதது, அதனை அளக்கவும் இயலாது. இதிலிருந்து தான் கற்றது "கைமண் அளவு" என்று வந்திருக்க லாம்.

அதனால், எதை அறிந்தால் நீர் எல்லாம் அறிந்ததாகுமோ, அப்பேர்ப் பட்ட உயர்ந்த அஷ்டாக்ஷர மந்திரத்தை, "ஓம் நமோ நாராயணாய" என்று உமக்கு நான் உபதேசம் செய்கிறேன். அப்பொழுதுதான் நீங்கள் கற்பது முழுமை பெறும் என்று உபதேசம் செய்தானாம்.

இதிலிருந்து மற்றுமொரு உண்மையும் புலப்படுகிறது. துவக்கத்தில் வேதங்கள் மூன்று மட்டுமே இருந் திருக்க வேண்டும். அதாவது ருக், யஜுர், சாமம் என்பவை அவைகள். ஏனெனில், இந்திரன் படைத்துக் காட்டியது மூன்று மலைகளைத்தான்.

*வேதங்கள் பகவானிடமிருந்து நேரிடையாகக் கேட்கப்பட்டதால் "ஸ்ருதி" என்றும், பிறகு அதை மறக்காமலிருக்க, அடிக்கடி மனனம் செய்வதால் "ஸ்மிருதி" என்றும், இந்த வேதங்கள் தல வாசத்தால் புத்தகங்களாக இல்லாமல் பரம்பரை பரம்பரையாகக் குருகுல வ மட்டும் வழிவழியாக வருவதால், "ஆம்னாயம்" என்றும் அழைக்கப்படு கின்றன.*

*பொதுவான இந்த வேதங்களை வியாசர் நான்காகப் பிரித்தார். அவை ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்பன. அதனால்தான், அவருக்கு வேதவியாசர் என்ற பெயர்.*

*ஒவ்வொரு வேதத்திற்கும் மூன்று பகுதிகள் உண்டு.*
*1. மந்திரங்கள்,*
*2. சம்ஹிதைகள்*
*3. பிராம்மணங்கள்.*

*பல முனிவர்களால் கேட்கப்பட்ட தால், இதற்கு 'த்ரஷ்டாரம்' என்ற பெயரும் உண்டு.*

*வேத மந்திரங்களைக் கண்டபடிச் சொல்லக்கூடாது. எப்படி சாஸ்த்திரீய சங்கீதத்தில் பாடும் முறைகளுக்கு ஒரு தனிவழி இருக்கின்றதோ, ராகம், தானம், ஸ்வரம், சுருதி, லயம் என்று கட்டுப்பாடு இருக்கின்றதோ, அம்மாதிரியே வேதங்களைக் கோஷிப் பதற்கும் ஒரு தனி நியமம் உண்டு. வேதங்களைச் சரியான ஸ்வரத்தில் சொல்வதற்காக அதன் எழுத்துக்களை மாத்திரை மாறாமல் (இங்கு மாத்திரை என்பது வேத எழுத்துக்களை உச்சரிக்கும் முறை) இருப்பதற்கு, அதனுடைய சரியான, பொருத்தமான விளக்கங் களுக்கும், சடங்குகளில் செய்யப்படும் கர்மாக்களுக்கும், வேதங்களிலிருந்து, சரியான, அதற்குப் பொருத்தமான பகுதியைத் தேர்ந்தெடுப்பதற்கும் வேதாந்தங்கள் தோன்றின. அவை,*

*1. சிக்ஷா : வேதங்களின் அக்ஷரங்களைச் சரியாக உச்சரிக்க, அதன் சொற் களைச் சரியான ஸ்வரத்தில் சொல்ல ஏற்பட்டது.*

*2. சந்தஸ்: சொற்களைச் சரியாகப் பகுக்கப் பயன்படும் முறை.*

*3.வியாகரணம்: அவைகளின் இலக்கணம்.*

*4. நிருக்தம்: கடினமான பகுதிகளைச் சொற்களைப் பிரித்துப் பகுக்கும் விதம்.*

*5. ஜ்யோதிஷம் : வானியல் அறிவு.*

*6. கல்பம் : வேதங்களை முறைப்படிச் சொல்லுதல்*

*******************************************************************************

*இவைகளைத்தவிர, வேதாங்கம் என்ற பகுதியும் உண்டு. தவிர, ஒவ்வொரு வேதத்திற்கும் தனித்தனியே நிஷதங்கள் உண்டு. மறைப்பொருளை நாடும் நூல்களுக்கு உபநிஷதங்கள் எனப் பெயர். சில முதன்மையான வேத உபநிஷதங்கள்.*

| | |
|---|---|
| *1. பிரச்னோபநிஷதம்* | *6. தைத்திரியம்* |
| *2. ஈசோபநிஷதம்* | *7. முண்டகம்* |
| *3. கேனோபநிஷதம்* | *8.மாண்டூக்யம்* |
| *4. கடோபநிஷதம்* | *9. பிருஹதாரண்யகம்* |
| *5. ஐதரேயம்* | *10.சாந்தோக்யம்* |

*நவீன காலத்தில் நூற்றுக்கணக்கான வக்கணக்கான் உபநிஷதங்கள் புதிதாக புனையப் பட்டவை. அவை ஏற்கப்படவில்லை. மேலே சொல்லப்பட்ட பத்து உபநிஷதங்களே எல்லோராலும் ஏற்கப் பட்டவை.*

*****************************************************************************